Phone No 4502 Regd. No. M. 5458

அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (5—6—50) வெளியூர் (6—6—50) [இதழ் 270

வெள்ளையரை வெளியேற்றத் தீவிர இயக்கம்

கிழக்கு ஆப்ரிக்க மக்களின் சுதந்திரக் கிளர்ச்சி

கட்டுப்பாடுடன் நடந்துகொள்ள முடுக்கான விதிகள்

மலான் வைத்த தீயல் வெள்ளையருக்கேற்பட்டுள்ள ஆபத்து

நைரோபி, ஜூன் 4—

கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து வெள்ளையரை ஒழித்துக்கட்டுவதற்காகவே, சில சுதேசி மலை ஜாதியினர் ஒரு இயக்கத்தை நடத்திவருகின்றனர் என்பது இப்பொழுது தெரியவருகிறது.

இங்கிருந்து 40 மைல் தூரத்திலுள்ள நைவாஸா என்ற இடத்தில், நடுநிசியில் குடிசை ஒன்றில் ஒரு விளக்கு வெளிச்சத்தில 15 ஆடவர்கள், 4 பெண்கள் இந்த இயக்கப் சம்மந்தமாக விசுவாசப்பிரமாணத்தின்படி நடக்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டு, விசாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

[illegible] ட்டப்பட்ட [illegible]கூ-யூ ஜாதியைச் [illegible]ந்தவர்களாம்.

இவர்களில் ஒருவர் அங்கு நடந்ததுபற்றி கூறியதாவது:-

ஒரு ஆட்டின் ஹிருதயம் தனியாக எடுக்கப்பட்டு தலையைச்சுற்றிக்கொண்டுவரப்படுமாம், பின்னர் அதை ஒருதரம் கடிக்கவேண்டுமாம். இம்மாதிரி ஒரு தடவை செய்யப்படுமாம், பின்னர் ஒரு தொலையிலுள்ள ஆட்டு ரத்தத்தை ஏழு தடவை உறிஞ்சவேண்டுமாம். இதெல்லாம்ஆனபின்பு ஐரோப்பியர்களை ஒழித்துக்கட்டும் 'மாவ் மாவ்' சங்கத்தின் மெம்பராக முடியுமாம்.

இந்தப் பிரதிக்ஞையை மீறி நடந்தால், அவர்கள் உயிர் போய்விடும்என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்களாம்.

இம்மாதிரிசுமார்20 கோஷ்டிகள் இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. (ரூளோப்)

இந்தச் செய்தி, சற்று மிருகத்தனமாக உள்ளதென்றாலும், சுயேச்சை உணர்ச்சி பெற்றவர்களால் வெறுத்துத்தள்ள முடியாததொன்று.

கிழக்குஆப்ரிக்காவிலிருந்து, வெள்ளையரை வெளியேற்ற சுதேசிகள் இதுபோன்ற தீவிர முறைகளைக் கையாள முனைந்துள்ளனரென்றால், வெள்ளையர் மீது எவ்வளவு வெறுப்படைந்துள்ளனரென்பதையே எடுத்துக்காட்டுகிறது. வெள்ளையர் மீது நீக்ரோ சுதேசிகள் வெறுப்படைவதற்கு உள்ள காரணங்கள் கொஞ்சநஞ்சமன்று.

ஆப்பிரிக்கா கண்டத்தில் வந்து குடியேறிய வெள்ளையர் இருண்ட கண்டத்தைத் தாயகமாகக் கொண்டோர்களை விடாமல், உலகம் தோன்றிய காலந்தொட்டுத் தாய் நாடாகக்கொண்டு வாழ்ந்த மக்களை சின்னாபின்னமாக்கினர். ஆப்ரிக்காவில் தோட்ட வேலை செய்ய ஆயிரமாயிரம் நீக்ரோக்களை அடிமைகளாகப் பிடித்துச்சென்று விற்றார்கள். பலரை வேட்டையாடித்தள்ளினார்கள்; என்றாலும் சுதேசிகளை, அமெரிக்காவில் சிகப்பு இந்தியரை இருந்த இடம் தெரியாமல் அழித்துவிட்டது போல் அழித்துவிட முடியவில்லை.

தென் ஆப்ரிக்காவில், அதாவது நிறவெறி கொண்ட மலான் ஆட்சிநடத்தும் நாட்டில் மூன்றில் ஒரு பங்குதான் வெள்ளையர்; ஆனால்,நிர்வாகம் அவர்கள் கையில். வெள்ளையர் வாழும் பகுதியில் நீக்ரோக்கள் உலாவக்கூட அனுமதிப்பதில்லை. நாகரீகம் வளருகிறதே தவிர தென் ஆப்ரிக்க வெள்ளையரின் மனம் பண்படவில்லை. ஸ்மட்ஸ் பிரதமராக இருந்தபோது, கொண்டு வந்த திட்டங்கள் சுதேசிகளுக்கும், இந்தியருக்கும் பெரிதும் பாதகமாக உள்ளதென்று கருதினோம். ஆனால்,அவருக்கு அடுத்தபடி பதவிக்கு வந்துள்ள மலான் திட்டம், நாகரீக உலகம் எண்ணிப்பார்க்கக் கூட முடியாத அவ்வளவு பயங்கரமாக உள்ளது.

வளர்ந்துவிட்டதால் தானே இவ்வாறு செய்கிறார்கள்; ஆகையால், தென்ஆப்பிரிக்காவில் வேரூன்றிவிட்டதைப் போல்இங்குமஅனுமதித்தால், பின்பு நம்மை நசித்துவிடுவார்களென்ற பயம், கிழக்கு ஆப்ரிக்க மக்களிடையே ஏற்பட்டிருக்கவேண்டும்அதனால்தான் வெள்ளையரை மேலும் கிழக்கு ஆப்ரிக்காவில் வந்து குடியேறாமல் தடுக்கவும், இருக்கிறவர்களுக்குக் கிலி உண்டாக்கவும பயங்கரமான இயக்கத்தை ஆரம்பித்துள்ளார்கள்,

மலான்நாட்டினரைப்போல் மமதை கொண்டலையாமல், சுதேச மக்களுடன் நல்லெண்ணத்துடன் வாழ வெள்ளையர் முயல வேண்டும். நிறத்தால் உயர்ந்தோர்தாழ்ந்தோரென்ற வேற்றுமையை விட்டு சொந்த நாட்டுக்காரர்களுக்குச் சம உரிமையாவது கொடுக்கவேண்டிய அவசியத்தை வெள்ளையர் இன்றாவது உணர்வார்களாக!

உலகத்தின் பெரிய எரிமலை தீ கக்குகிறது

உலகத்திலேயே மிகப்பெரியதும் உக்கிரமாக அனல் கக்குவதுமான ஹவாய் எரிமலை 13000 அடி உயரமுள்ளது மீண்டும் தீ கக்க ஆரம்பித்துவிட்டது. தீப் பிழம்பின் சோதி 200 மைல் தூரத்திற்கு தெரிகிறது. 18—மாதங்களுக்கு முன்பு ஒரு தடவை அக்னிக் குழம்பு கக்கியது.

'வரி கொடுத்தால்தான் வாழ்வுண்டு'

(…)

ஆக்கவேலைகள் அனைத்தையும் செய்ய ஆட்சியாளருக்கு ஆற்றல் இல்லை

(0)

நிதி அமைச்சர் கோபாலரின் முகாரி

"மக்கள் அதிக வசதிகளைப் பெற விரும்பினால், அவர்கள் அதிக வரி கொடுக்கத்தயாராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், எந்தவிசமுன்னேற்றத்தையும் அவர்கள் பெற முடியாது. பழைய நிலைமையிலேயே இருக்க நேரிடும்."

"மத்தியசர்க்காரும் மாகாண சர்க்காரும் மக்களுடைய முன்னேற்றத்துக்கென ஏதும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன."

"எல்லாப் பிரச்னைகளுக்கும் மேலாக, தனிப்பட்ட மூலதனம் பற்றி வெட்கப்படுவது தான் ஒரு பெரும் தொல்லையாகிவிட்டது சர்க்காருக்கு"

இவை, சென்னை நிதி அமைச்சர் தோழர் கோபால் ரெட்டி அவர்கள், அண்மையில் உதகையில் 'இந்திய யூனியன் கிளப்பில்' பேசியபோது வெளியிட்டுள்ள கருத்துகள்!

அதிக வசதி வேண்டுவோர் அதிக வரி தர வேண்டுமாம் இது அமைச்சரின் வாதம். அமைச்சர் கோபாலர் நிதி அமைச்சரல்லவா, எனவே தான் நிதி திரட்டும் பணியில் நாட்டம் செலுத்துகிறார் போலும்!

இது சமதர்மகாலம், ஆட்சியாளர் வரி வசூலிப்பதில் மட்டுமே நாட்டம்செலுத்துவதை விடுத்து, தொழில்களைத்தேசியமயமாக்கி வருவாய்க்கு வழி தேட வேண்டிய காலம்; உடமைகளனைத்தும் மக்களுக்குப் பொதுவாக வேண்டியகாலம் இப்படிப்பட்ட காலத்தில் தான் "வரி கொடுத்தால்தான் வாழ்வு உண்டு. இன்றேல் அணைவருக்கும் தாழ்வே" என்ற பல்லவியைப்பாடுகிறார். பாடட்டும்; ஆனால் பாட்டு பழைய பாட்டு-பயன்தராத பாட்டு என்பதை அமைச்சருக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

சர்வதேச தொழிற்சங்க தூதுக்குழு

லண்டன், ஜூன் 4—

சர்வதேச சுதந்திர தொழிற்சங்க பெடரேஷன் இந்தியா, சீழ்க்கோடிக்கு அனுப்பும் 4 பேர் கொண்ட தூது கோஷ்டி இன்னும் ஒரு வாரத்தில் பிரயாணப்பட்டுக் கிளம்பும் எனத் தெரிகிறது.

கூட்ஸ்கள் மோதியதில் 4 பேர் மாண்டனர்

புதன்கிழமையன்று கட்டோரா ஸ்டேஷன் அருகே 2 கூட்ஸ் ரயில்கள் மோதிக்கொண்டதில் 2 டிரைவர்கள் உள்பட 4 பேர் மாண்டனர்.

போர் மூள வேண்டுவது அவசியம்

(0)

முன்னாள் ராணுவ அதிகாரியின் கருத்து

யுத்தம் என்பது, சிலகாலத்திற்கு ஒருதரம் ஏற்பட்டால்தான், சமூகத்திற்குபாந்தமாக இருக்கும் என்றும், பொருளாதாரமோ அல்லது கொள்கைத் தத்துவமோ யுத்தத்திற்குக் காரணமல்லவென்றும் 'ஸெக்ஷுவல்' தன்மைதான் இதற்குக் காரணம் என்றும் இந்தியாவில் 11-ஆண்டுகாலம் ராணுவத்தில் சேவை செய்த வால்டர் என்பவர், தன் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இவர் வெளியிட்ட கருத்து இவர் 'பைத்தியமா' என்று பலரைச் சந்தேகிக்கச்செய்திருக்கிறது.

1945-ம் ஆண்டிலிருந்து இன்னும் 10 ஆண்டுகளுக்குள் மற்றொரு யுத்தம் ஏற்பட வேண்டும் என்று இவர் கூறுகிறார்.

காந்தியாரின் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து ஆராய்ந்ததில், உலகசர்க்காரின் திட்டங்கள் எல்லாம் பலனற்றது என்பதை, தான் அறிந்ததாகவும் அவர் கூறுகிறார்.

போர்மோஸா விரைவில் தாக்கப்படலாம்

தென்கிழக்கு சீனாவில் போர் முஸ்தீபு வலுக்கிறது

ஹாங்ஹாங், ஜூன் 4—

போர்மோஸாமீது படையெடுக்க, கம்யூனிஸ்டுகள் ஜப்பானிய துருப்புகளை உபயோகிப்பர் என்று, ஊர்ஜிதமாகாத காண்டன் செய்திகள் கூறுகின்றன.

தென் கிழக்குச் சீனாவில் துருப்பு நடமாட்டங்கள் அதிகரித்திருப்பதாகவும், போர்மோஸா படையெடுப்புக்கான முஸ்தீபுகள் நடைபெற்று வருவதாகவும், ரஷ்ய அதிகாரிகள் மேற்பார்வையில் ஷான்டங் கடற்கரையில் ஒத்திகைகள் நடைபெற்று வருவதாகவும் சில காண்டன் செய்திகள் கூறுகின்றன.

பாக்கிஸ்தான் பாங்கி

கராச்சி, ஜூன் 3—

ஜெட்டாவில் பாகிஸ்தான் ஸ்டேட் பாங்கியின் ஒரு கிளையை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்ட்ரீல், ஜூன் 4—

கனடாவின் தங்க உற்பத்தி சென்ற எட்டு வருஷங்களுக்குப் பின், இப்பொழுது அதிகரித்திருக்கிறது என்பதை வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகிறது.

தேயிலை உற்பத்தி

சீனா மீண்டும் கவனம் செலுத்தும்

லண்டன், ஜூன் 4—

தேயிலை உற்பத்தியில் மீண்டும் பூர்ணமாக கவனம் செலுத்த, சீனா விசேஷ முஸ்தீபுகளைச் செய்து வருவதாகத் தெரிகிறது. சென்ற யுத்தத்திலிருந்து சீனாவின் தேயிலை உற்பத்தி குறைந்துவிட்டது.

மாலை மணி

சென்னை 5-6-50 திங்கட்கிழமை

போர் நிற்காது!

பள்ளிகளில், இந்திமொழியைக் கட்டாயமாகப் புகுத்த அரசியலார் போட்டிருந்த திட்டம் சரிய ஆரம்பித்துவிட்டதாகத் தெரிகிறது. இவ்வாண்டு ஜூன் மாதம் முதல் அமுல் நடத்தப்படவிருந்த இத்திட்டம், அடுத்த ஆண்டுக்கு ஒத்திப் போடப்பட்டுவிட்டதாம்.

இந்திமொழியைக் கட்டாயமாக்கவேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, இன்னும் ஒரு திங்கள்கூட ஆகவில்லை அதற்குள் அரசியலாருக்கு இந்த தடுமாற்றம் ஏற்பட்டிருப்பது பரிதாபத்துக்குரிய விஷயமே.

கட்டாயம்கூடாது; அதிலும் சிறுவர்களுக்கு, அது அறவே கூடாது. இதனால் தாய்மொழி கெடும்; இந்நாட்டுப் பண்பாடுகளுக்கே ஊறு நேரிடக்கூடும் என அரசியல், மொழி இயல் அறிந்த அறிஞர்கள், இன்று நேற்றல்ல, கடகக பத்தாண்டுகளாகச் சொல்லி வருகிறார்கள். கட்டாய இந்தியை எதிர்த்துப் போராட்டங்கள் பல நடந்தன. அப்போராட்டத் தீ, இன்னமும் அடங்கியபாடில்லை. இந்நிலையிலேதான், வெந்தப் புண்ணிலே வேல் நுழைப்பதுபோல், மீண்டும் இந்தியை கட்டாய பாடமாகத் திணித்தனர் இந்த ஆட்சியாளர்.

ஆட்சியாளரிடம் தோன்றிய துணிவும், வீம்பும் இன்று ஓரளவு குறைய ஆரம்பித்துவிட்டது என்பதையே காட்டுகிறது இந்திபற்றி உண்மையில் வெளிவந்திருக்கும் செய்தி, இங்ஙனம் ஆட்சியாளரிடம் தோன்றியிருக்கும் மனமாற்றத்துக்கு, அண்மையில் அவையூ சியார் இத்திட்டத்தைக் கண்டித்துப் பேசியதே காரணம் என்று கூறப்படுகிறது.

ஆனால், உண்மையை ஆராய்ந்து பார்க்கையில் காரணம் அதுவல்ல என்பதுதெளிவாகும். அவினாசிகளின் கண்டனங்கள், வெறும் கண் துடைப்பு என்பதை நாடு நன்கறியும். அதமட்டுமல்ல, இன்றைய நிலையிலே தமிழரின் சார்பிலே நின்று தமிழ்மொழிக்கோ, நாட்டுக்கோ பரிந்துபேசும் பக்குவம் அவினாசிகளுக்குக் கிடையாது.

அப்படியாயின், ஆட்சியாளரின் மனமாற்றத்துக்குக் காரணம்தான் என்னவெனில், அண்மையில் கோவையில் தி. மு. கழக ஆதரவில் கூட்டப்பட்ட முத்தமிழ் வளர்ச்சி மாநாடே என்று உறுதியிட்டுக் கூறிவிடலாம். முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளை ஊடுருவிப்பார்ப்போர்க்கு இவ்வுண்மை எளிதில் புலனாகும்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு வெறும் மொழி மாநாடு மட்டுமல்ல. தமிழகத்தின் மானத்தைக் காக்கப் புத்துணர்ச்சி கொண்டு எழுந்த, இளைஞர் பெரும் படையின் ஒத்துழைப்பிலே உருவானதோர் உயரிய மாநாடு. அங்கு பேசப்பட்டது, மொழி இயல் என்று சொல்லப்பட்ட போதிலும். பேசிய அத்தனைபேரும் தமிழரின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள ஓர் அரசியல் இயக்கத்தின் சார்பில் நின்றே பேசினர். அங்கு குழுமியிருந்த மக்களும், அங்ஙனமே அரசியலில் தமிழுக்கு, தமிழருக்கு, தமிழ் நாட்டிற்கு என்ன பங்கு என்று கேட்கும் ஆர்வத்தினராகவே காட்சி அளித்தனர் பேச்சுகள், இயல், இசை, கூத்து பற்றியே பேசப்பட்டதாயினும். இவை அனைத்துக்கும் அடிப்படை அரசியல் என்பதை அனைவரும் உணர்ந்தே பேசினர், மக்களுக்கும் அதனை உணர்த்தினர் 'கூட்டு முன்னணி அமைத்தேனும் நாட்டு மொழி காப்போம்' என்று உறுதிகொண்டனர் அம்மாநாட்டினர். இத்தகை எழுச்சிமிக்கதோர் மாநாட்டின் எதிரொலியேஇந்திபற்றி, அரசியலார் இன்று கொண்டிருக்கும் கட்டாய மன மாற்றம்! வாழ்க முத்தமிழ் வளர்ச்சி மாநாடு!

கோவை மாநாட்டின் எதிரொலி சென்னை அரசியலாரின் கட்டாய இந்தித் திட்டத்தை ஓரளவுக்குப் பின்னோக்கிஓடச் செய்துவிட்டது மகிழ்ச்சிக்குரியதே. ஆயினும், திராவிட மக்கள் இதுகண்டு அமைதி பெற வழியில்லை. கட்டாய இந்திஇவ்வாண்டில்தலைகாட்ட அஞ்சுகிறதேயன்றி, நாட்டை விட்டு ஓடிவிடும் உத்தேசம் அதற்கில்லை அது பதுங்கிப் பாயப்பார்க்கிறது. மீண்டும் அடுத்த ஆண்டில் எப்படியும் தலை காட்டத்தான் போகிறது. கட்டாய இந்தித் திட்டம் கைவிடப்பட்டது அல்லது இவ்வாண்டில் இல்லை என்ற முறையிலே, அரசியலார் அறிக்கை வெளியிட்டிருந்தால் நாம் ஓரளவுக்கு அமைதியுற வழியுண்டு. ஆனால் நடந்தது அதுவல்ல தமிழரின் தன் மானத்துக்கு சவால் விடும் முறையிலே தங்களுடைய கிட்டத்தை அடுத்த ஆண்டில் நிறைவேற்றப்போவதாகக் கூறுகின்றனர். இதற்கு ஏதேதோ பொறுத்தமில்லாக் காரணங்களைக் காட்டுகின்றனர். பாடத்திட்டங்கள் தயாராகவில்லை; அவினாசியார் சண்டிக்கிறார் என்றெல்லாம் கூறுகின்றனர். இது நம் அரசியலாரிடம்அடிக்கடி காணப்படும் நேர்மைக்கோர் எடுத்துக்காட்டு.

மொழிப் பிரச்னை சம்பந்தப்பட்டவரையில் ஆட்சியாளரின் போக்கு மிக மிக வருந்தத்தக்கது இவர்கள் என்னநினைத்துக் கொண்டிருக்கிறார்கள் தமிழ்நாட்டில் தமிழுக்கு ஆக்கமளிக்கப்படவில்லை; அயல் மொழிக்கு ஆதரவு காட்டப்படுகிறது என்பது குறித்து ஏற்கனவே புண்பட்ட உள்ளத்தினராக வாழும் தமிழரிடையே இங்ஙனம் ஆட்சியாளர் கட்டாயஇந்தியைக் காட்டிக்காட்டி பேசுவது குறும்புத்தனமேயன்றி வேறில்லை.

இந்தி விருப்பப்பாடமாக இடம் பெறுவதை யாரும் தடைசெய்யவில்லை. அயல் மொழி என்ற ஒரே காரணத்துக்காக அம்மொழியை வெறுப்பாரில்லை. கட்டாயம் கூடாது; அது தமிழகத்தின் தன்மானத்தை, வாழ்வை சிதைக்கவல்லது என்பதுதான் தமிழ் மக்களின்குற்றச்சாட்டு. இதை அரசியலார் உணர வேண்டும். உணர்ந்ததற்கு அறிகுறியாக கட்டாயம் என்ற சொல்லை அறவே நீக்கிவிட வேண்டும். அப்படிச் செய்யாதவரை இந்தி எதிர்ப்புத் தீ, அணையப் போவதேயில்லை. இந்தி எதிர்ப்பு ஓர் எரிமலை. அது எந்தநேரத்திலும், கனல் கக்கக்கூடும் அந்த எரிமலையின் குமுறலின் எதிரொலியே முத்தமிழ் முழக்கமாக கோவையிலே ஒலித்தது. அதுகாரணமாகவே, இந்தியின் கட்டாயவேகம் ஓரளவு குறைந்திருக்கிறது. வேகம் குறைவது மட்டும் போதாது. அதன் படையெடுப்பு மனப்பான்மை அழியவேண்டும். அதுவரையில், தமிழரின் மொழிப்போராட்டம் நின்று விட்டதாகக் கொள்ளமுடியாது. இந்தி கட்டாயமில்லை என்று தெளிவு ஏற்படாதவரை, போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேதானிருக்கும்.

சர்க்கரை உற்பத்தியும் கையிருப்பும்

இந்தியாவிலுள்ள மத்திய சர்க்கரை ஆலைகளில், 1950 ஏப்ரல் 30-ந் தேதியுடன் முடிவடைந்த இரண்டு வார காலத்தில், சர்க்கரை ஆரம்பக் கையிருப்பு 1,58,11,000 மணங்கும், உற்பத்தி 3,84,000 மணங்கும், ஆலைகளிலிருந்து அனுப்பியது 11,70,000 மணங்கும் இறுதிக் கையிருப்பு 1,50,25,000 மணங்குமாக இருந்ததாக, கான்பூரிலுள்ள இந்திய சர்க்கரைத் தொழில் ஆராய்ச்சிக்கழக டைரெக்டர், 1935-ம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி விதிகளின்கீழ் தமக்கு அனுப்பப்பட்டுள்ள தகவல்களிலிருந்து தெரியவருவதாக அறிவிக்கிறார். முந்திய பருவத்தில்இதற்குச் சரியான காலத்தில் இந்த அளவுகள் முறையே, 1,36,99,000 மணங்கும், 8,08,000 மணங்கும், 15,16,000மணங்கும்,1,29,91,000 மணங்குமாக இருந்தன.பரிசீலனைக் காலத்துக்கான புள்ளி விவரங்கள் மொத்த உற்பத்தி சக்தியில் 98.69 சதவிகிதம் கொண்ட 135 ஆலைகள் பற்றியவையாகும். முந்திய பருவத்துக்கான புள்ளிவிவரங்கள் மொத்த உற்பத்தி சக்தியில் 86 சதவிகிதங்கொண்ட 113 ஆலைகள் பற்றியவையாகும்.

1949 நவம்பர் முதல் தேதிக்குப் பிறகு உற்பத்தியான சர்க்கரையின் மொத்த அளவு 2 61,49,000; ஆலைகளிலிருந்து அனுப்பப்பட்டது 1,21,72,000 மணங்கு. முந்திய பருவகாலத்தில் இதற்குச் சரியான காலத்தில் இவை முறையே 2,54,14,000 மணங்கும்; 1,71,84,000 மணங்குமாக இருந்தன.

1949 50 பருவகாலத்தில் 1949 நவம்பருக்கு முன்னுள் உற்பத்தியான சர்க்கரையில் மொத்த அளவு 91,000 மணங்காகும்.

கழகத் தோழர்களே! கிளைக் கழகங்களே!

கட்டிட நிதிக்கு

தேவை ரூ. 10,000
கிடைத்திருப்பது 3,000

★

இடைவெளியை
காணிக்கையால் இணையுங்கள்

வெற்றிகரமாக செய்யப்பட்ட இருதய ஆபரேஷன்

லண்டன், ஜூன் 4—
புகழ்பெற்றரியான ஹிருதய ஆபரேஷனை வெற்றிகரமாக நடத்தமுடியுமென்பதை, லண்டன் கய்ஸ் ஆஸ்பத்திரியில் டாக்டர் பிராக் என்பவர் செய்து காட்டியிருக்கிறார். 9-கேஸ்களில் 7 ஆபரேஷன்கள் வெற்றிகரமாகவே முடிந்திருக்கிறதாம்.

ஹிருதய வால்வுகள்பற்றிய வியாதியைக் குணப்படுத்தவே இந்த ஆபரேஷன் செய்யப்படுகிறதாம். நிலைமை மிகவும் மோசமாகிவிடுவதற்கு முன்னமேயே இந்த ஆபரேஷன் செய்யப்படவேண்டியது என்று சொல்லப்படுகிறது.

இந்த ஆபரேஷன் பற்றிய விவரங்களை, பிரபல அமெரிக்க டாக்டர்களுக்குத் தெரிவிக்க டாக்டர் பிராக், யுனைடெட் ஸ்டேட்ஸ் செல்கிறார்.

நில நூல் ஆராய்ச்சிக்கு உபகாரச் சம்பளம்

பூமி அளவு நூல் பற்றி ஆராய்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், இந்திய சர்க்கார் மாதம் 200 ரூபாய் வீதம் இரண்டுபேருக்கு உபகாரச் சம்பளம் வழங்கத் தீர்மானித்திருக்கின்றனர். உபகாரச் சம்பளம் மூன்று ஆண்டு காலத்துக்கு வழங்கப்படும். உபகாரச் சம்பளம் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், டேராடூனிலுள்ள இந்திய சர்வே ஸ்தாபனத்தைச்சேர்ந்த பூமி நிமாண அளவுப் பயிற்சி பிரிவில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். உபகாரச் சம்பளம் பெற விரும்புபவர்கள், கணித சாஸ்திரத்தில் முதல் வகுப்பு எம். ஏ. பட்டம் பெற்றவர்களாயும், பௌதிக சாஸ்திரத்திலும், வானசாஸ்திரத்திலும் ஓரளவு விஷய ஞானமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்கள், இந்திய சர்க்கார் கல்வி மந்திரி காரியாலயம், தொழில் நுட்பப் பிரிவுக்கு, 1950 ஜூன் 21-ந்தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரரின் கல்வி யோக்யதாம்சங்கள், வயது, ஆராய்ச்சி வேலையில் அனுபவம், தற்போதைய வேலை முதலிய விவரங்கள் அதில் கொடுக்கப்படவேண்டும். அவசியமான அத்தாட்சிப் பத்திரங்களும் விண்ணப்பத்துடன் அனுப்பப்பட வேண்டும்.

விபரீதமான பரீட்சை வேண்டாம்

குரங்கு-மனிதன் சேர்க்கை உற்பத்திக்கு எதிர்ப்பு

லண்டன், ஜூன் 4—
மனிதனின் விந்துவைக் கொண்டு, பெண் மனிதக் குரங்கைச் சினைப்படுத்தி, அடிமை வேலைகளுக்காக புது குரங்கு மனிதர்களை உற்பத்தி செய்யலாம் என்கிற ஆலோசனையை, வர்ஜினியா சர்வகலாசாலை புரபஸர் டாக்டர் ஸிட்னிவில்லியம் பிரிட்டன், ஒரு யோசனையை வெளியிட்டிருந்தது.

இந்த யோச[illegible] மான எதிர்ப[illegible] வில் ஏற்பட்டிருக்கிற[illegible]

பிரபல பிரிடிஷ் நிபுண[illegible]கள் இம்மாதிரி செயற்கை முறையில் சினைப்படுத்துத[illegible] சாத்யமற்றதென்று கூ[illegible]கின்றனர். இதனால் உற்ப[illegible]யாகும் மனித—குரங்கு ஜீவ[illegible]களால் எத்தகைய கேடு சம்பவிக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்படி அமெரிக்க பாதிரிகள் எச்சரிக்கின்றனர்.

—குளோப்

காந்தியார் சொன்னர்!

முயன்றுல்....?

டர்பன், ஜூன் 4—
"தென்னாப்பிரிக்காவின் தீர்க்க முடியாத பிரச்னைகள்பற்றி நான் அடிக்கடி கேள்விப் படுகிறேன். ஆனால் அவை தீர்க்க முடியாதவை என்று நான் சம்மதிப்பதாக இல்லை" என்று சர்வதேச சமாச சங்க காரியதரிசி தோழியர் மூரியல் லெஸ்டர் இங்கிலாந்துக்குப் புறப்படுமுன் தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

"எதுவும் அசாத்யமில்லை" என்பதை விளக்கி அவர் கூறியதாவது:

"நான் பாபுஜியை(மகாத்மாவை) 1926-ல் சந்தித்தபொழுது, தீண்டாமை என்பது தீர்க்கமுடியாத ஒரு பிரச்னை என்றேதோன்றியது. ஆனால் இது கடவுளுக்கே ஏற்கும் விஷயமில்லை என்றும் இதை ஒழிக்கவேண்டும் என்றும் இந்திய தேச பக்தர்கள் பிரசாரம் செய்தனர். இன்று ஒருவனைத்தீண்டாதவன் என்று அழைப்பதுகூட கண்டிக்கும்படியான விஷயம்.

பாபுஜி 1931-ல் வட்டமேஜை மாநாட்டிற்காக லண்டன் வந்தபோது "நான் எந்த முடிவையும் பிரார்த்தனைக்குப் பிறகுதான் செய்வேன். இந்தியா மட்டும் சுதந்திர நாடாகவேண்டும் என்ற எண்ணத்தைக்கொண்டு நான் உழைக்கவில்லை. ஒவ்வொரு நாடும் சுதந்திர நாடாக ஆகவேண்டும் என்பது கடவுளின் விருப்பமாதலால், அதன்பொருட்டே உழைத்துவருகிறேன்" என்று கூறினர்.

பத்தாண்டுகள் பரதவித்துப் பெற்ற உலுத்துப்போன பதவி

மீண்டும் வேண்டாம் என்கிறார் பட்டாபி

காங்கிரஸ் கசப்பேறிவிட்டது ஒரே ஆண்டில்!

சென்னை, ஜூன் 3—

இந்திய தேசியக் காங்கிரஸ் தலைவர் தோழர் பட்டாபி சிதாராமையா, மீண்டும் காங்கிரஸ் தலைவராக முயற்சிக்க மாட்டாரென்று, காங்கிரஸ் காரியதரிசி தோழர் காளா வெங்கட்ராவ் ஒரு பேட்டியில் கூறினார்.

பத்தாண்டுகளுக்கு முன்பு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களும், 'போஜராஜூ' பட்டாபி சிதாராமையாவும் இந்திய தேசியக் காங்கிரஸ் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டார்கள். தோழர் சுபாஷ் சந்திரபோஸ் வலியர் என்ற காரணத்தாலும், தீவிர நோக்கங்கொண்டவர் என்பதனாலும், வெள்ளையனை வெளியேற்ற [illegible]னே நேரடி நட[illegible]க்க வேண்டு[illegible]தாலும், காந்தி[illegible] சுபாஷ்சந்திரபோஸ் காங்கிரஸின் தலைவர் ஆவதை விரும்பவில்லை. அவருடைய ஆதரவு பெற்ற அபேட்சகராக நின்றவர் தோழர் பட்டாபி சிதாராமையா, தேர்தலில் பெருவாரி ஓட்டுகளுடன் வங்கத்தின் சிங்கம், தோழர் சுபாஷ்சந்திரபோஸ் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். முற்போக்குக் கொள்கை கொண்டவர் என்ற காரணத்தால், சென்னை மாகாணம் அவருக்கு முழு ஆதரவு கொடுத்தது.

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'நேதாஜி' 106 டிகிரி காய்ச்சலுடன் திரிபுரா காங்கிரசுக்குத் தலைமை தாங்கினார் என்றாலும், அவர் தொடர்ந்து காங்கிரஸ் தலைவராக இருக்க முடியவில்லை. காரணம் அவர் காந்தியாரின் அசி பெறுதது தான் "பட்டாபி சிதாராமையாவின் தோல்வி, என் தோல்வி" என்று காந்தியார் அறிக்கை விட்டதால், காங்கிரஸ் காரியக் கமிட்டி சுபாஷ்சந்திரபோசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றியது. அதன்பேரில் தோழர் போஸ், காங்கிரஸிலிருந்து ராஜிநாமாச் செய்து நாட்டைவிட்டு மாறுவேடத்துடன் வெளியேறி, இந்திய தேசிய ராணுவத்தைத் திரட்டி பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை ஒரு குலுக்குக் குலுக்கி இந்தியா சுயேச்சை அடையும்படி செய்தார்.

ஆனால், தேர்தலில் தோற்றுப் போன பட்டாபி, பத்தாண்டுகள் பொறுத்திருந்தார் நாடு விடுதலையடைந்துவிட்டதால், காங்கிரஸ் இனித் தேவை இல்லையென்று கூறி, ஆச்சார்யா கிருபாளினி தலைமைப் பதவியை ஒதுக்கித் தள்ளிவிட்டார். யாரும் வேண்டாமென்று ஒதுக்கிய உளுத்துப்போன காங்கிரஸ் தலைவர் பதவியை, காந்தியார் மறைவுக்குப்பின் புருஷோத்தமதாஸ் தாண்டனுடன் போட்டியிட்டு, பட்டாபி சிதாராமையா பெற்றார். அப்பதவியில் ஓராண்டிருந்து பார்த்தார், புளித்துப் போய்விட்டது.

காங்கிரஸ் கட்சியின் சார்பில்தான் ஆட்சி நிறுவப்பட்டுள்ளது என்றாலும் காங்கிரஸ் தலைவருக்கு, ஒரு சிறிதும் மதிப்புதரப்படவில்லை சாதாரண மாகாண மந்திரி ஒருவருக்குக் கொடுக்கப்படும் மதிப்புகூட டாக்டர் பட்டாபிக்குக் கொடுக்கப்படவில்லை! அதனால்தான், தலைமைப் பதவி வகிப்பது வேடிக்கை - இல்லை, வேதனை தரக்கூடியதென்று உணர்ந்து கொண்டார் போலும்!

வாலிபர்கள் அங்கு விமானம் செய்கிறார்கள்

ஆனால் இங்கு......!

விமான விஷயமாக பேரார்வம் கொண்ட சில பிரிட்டிஷ் வாலிபர்கள், பிரைட்டன் என்ற இடத்தில் மோட்டார் கார், சைகிள், தையல் மெஷின் இவைகளின் 'ஸ்பேர்' பாகங்களை எல்லாம் வைத்துக் கொண்டு, ஒரு விமானத்தைச் செய்து முடித்திருக்கின்றனர்.

இவர்கள் முயற்சி முதலில் பாதிக்கப்பட்டதென்றாலும், முடிவில் இவர்கள் எப்படியோ வெற்றியை அடைந்துவிட்டனர்.

இவ்விமானத்தில் மேற்கூறப்பட்ட சாமான்களின் பொருள்கள் தவிர, 7 விமானங்களைச் சேர்ந்த சில பாகங்களும் இடம் பெற்றிருக்கிறதாம்.

இவ்விமானத்தை அதிகாரிகள் பறக்கவிடுவதற்கு அனுமதிப்பார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது.

தெ. ஆ. இந்தியர் நிலை

டர்பன், ஜூன் 4—

"தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கு நெருக்கடியை நேர்முகமாக நோக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இது ஒரு சோதனைக் காலமாகும்" என்று இனி மண்டல மசோதாவைப்பற்றி எழுதுகையில், 'இந்தியன் ஒபினியன்' குறிப்பிட்டிருக்கிறது.

அப்பத்திரிகை மேலும் எழுதியிருப்பதாவது:—நாம் சேரும் உரிமைகளுக்கு நாம் அருகதையுள்ளவர்தானா என்று சோதிப்பதுபோல் தெரிகிறது. இவ்விஷயத்தில் நாம் இப்பொழுது நடந்துகொள்வதிலிருந்தே நம்மை நாமே சௌரவித்துக்கொள்ளப்போகிறோமா இல்லையா என்பது வெளியாகவிருக்கிறது. —ருளோச்

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

	ரூ. அ. பை.
முன்வரவு	2909—1—6
தி. மு. க.—கொழும்பு நகரக்கிளை	25—0—0
„ —திருவொற்றியூர்க்கிளை	10—0—0
„ —கிருஷ்ணகிரிகிளை	10—0—0
நடேசன், வேலூர் கோட்டை	5—0—0
ஏ. அழகிரிசாமி. கோவில்பட்டி	1—0—0
என். இரத்தினவேலு. அய்யன்கோட்டை	1—0—0
தூத்துக்குடி பன்னீர்ச்செல்வம் நினைவுக்கழகம்	5—0—0
வி. கே. சாமி, புதுடில்லி	7—0—0
கே. வி. எஸ். ஐயா, „	5—0—0
ஆர். வி. ராஜு, „	4—0—0
எம். என். ராஜன், „	2—0—0
டி. டி. எஸ். மணி, „	2—0—0
எம். என். நாயர், „	1—0—0
எஸ். பி. நாதன், „	1—0—0
அலெக்ஸாண்டர், „	0—10—0
லாரன்ஸ், „	1—0—0
கண்ணன், „	0—8—0
எஸ். ஏ. எப். ஜேம்ஸ், „	0—8—0
சின்னப்பன், „	0—8—0
பி. பிள்ளை, „	0—8—0
மாணிக்கம், „	0—8—0
அனுசுயா பொன்னரசன். குடியேற்றம்	5—0—0
என். துரைராஜு, பொன்மலை	2—0—0
சொ ராமலிங்கம், தொட்டப்ப நாய்க்கனூர்	1—15—6
மா. புன்னைவனம், „	1—15—6
	3003—2—6

பாஸ்பேட் உர உபயோகத்தைப் பெருக்குக

மாகாணங்களுக்கு மத்திய சர்க்கார் அறிவிப்பு

நிலங்களில் ரசாயன உரங்கள் உபயோகிப்பதைப் பிரபலப்படுத்தவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி இந்திய சர்க்கார், சமீபத்தில் எல்லா மாகாண சர்க்கார்களுக்கும் கடிதம் எழுதியிருக்கின்றனர். இந்திய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் பாஸ்பேடிக் கிரனை, மாகாண சர்க்கார்கள் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும், பாஸ்பேட் உரங்களை உபயோகிக்கும் முறைகளை விவசாயிகளுக்கும் கற்றுக்கொடுக்க போதிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் இந்திய சர்க்கார், எல்லா மாகாண சர்க்கார்களையும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு சாகுபடியின் போதும், நிலத்தின் பாஸ்பேட் சத்து எவ்வளவு குறைந்து போகிறதென்பதையும், இந்த நஷ்டத்தை காலகாலத்தில் ஈடு செய்யாமற் போனால் எவ்வாறு விளைவு குறைந்து போகிறதென்பதையும் விஞ்ஞான பூர்வமாகப் புள்ளிவிவரங்களுடன் எடுத்துக்காட்டும் குறிப்பு ஒன்றும் இந்தக் கடிதத்துடன் அனுப்பப்பட்டிருக்கிறது. உதாரணமாக, நெல் சாகுபடி செய்யப்படும்போதும் ஒவ்வொரு தடவையும் ஏக்கருக்கு 20 பவுண்ட் விதம் பி. 2/ ஓ. 5/ பாஸ்பேட் சத்து நிலத்திலிருந்து எடுக்கப்பட்டுவிடுகிறதென்று கூறப்படுகிறது. மற்ற தானியங்கள் பயிர் செய்யப்படும்போது இவ்வாறே நிலத்தில் பாஸ்பேட் சத்து குறைந்துபோகிறது. நிலத்திலுள்ள பாஸ்பேட் சத்துக்கும், அந்த நிலத்தில் விளையும் உணவுப் பொருளை உட்கொள்ளும் பிராணிகளின் தேகாரோக்கியம், உற்பத்தி சக்தி ஆகியவற்றிற்குமுள்ள சம்பந்தமிருக்கிறதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மனிதர்களின் உடம்பிலும், பிராணிகளின் உடம்பிலும் உள்ள எலும்பின் நிறையில் சுமார் 20 சதவிகிதம் பாஸ்பேட்டேயாகும். ஆகையால், இவர்கள் உட்கொள்ளும் உணவில் பாஸ்பேட் சத்து குறைவாக இருப்பது, நாட்டு மக்களின் தேகாரோக்கியத்தைச் சீர்குலைப்பதாகவே இருக்கும்.

தற்போது இந்தியாவில் உற்பத்தியாகும் பாஸ்பேட்டுகளைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன், மத்திய விவசாய மந்திரி காரியாலயம் சென்ற மூன்றாண்டு காலமாக, பாஸ்பேட் திரள் ஒன்றை ஏற்படுத்தி நிர்வகித்து வருகிறது. இந்த ஏற்பாட்டின் கீழ் உள்நாட்டு உற்பத்தி மத்திய சர்க்காரால் கட்டுப்படுத்தப்பட்டு, உற்பத்தியாகும் பாஸ்பேட்டுகள் முழுவதையும் மத்திய சர்க்காரே எடுத்துக்கொண்டு, அதனதன் தேவைக்கேற்ப, பல்வேறு ராஜ்யங்களுக்கும் மத்திய சர்க்கார் வினியோகித்து வருகின்றனர். மத்திய சர்க்காரின் இந்த ஏற்பாட்டின்கீழ் கிடைக்கும் சுபர் பாஸ்பேட்டுகளை யெல்லாம் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும், அத்யாவசியமான இந்தப் பொருளைப் பூமியில் போடுவதன் மூலம், விளைபொருள் உற்பத்திப் பெருகுமென்றும் இக்கடிதம் ராஜ்ய சர்க்கார்களுக்கு வற்புறுத்திக் கூறுகிறது.

மேற்கு ஜெர்மனி வர்த்தகம்

ஸ்டர்லிங் பிரதேசத்துடன் தொடர்பு

லண்டன், ஜூன் 4—

மேற்கு ஜெர்மனிக்கும், ஸ்டர்லிங் நாடுகளுக்குமிடையேயுள்ள வர்த்தகம், செலுத்தல்வாக்கல் ஆதிய பிரச்னைகள் அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் வர்த்தக போர்டு பிரதிநிதிகள், ஜெர்மனியன் பிரதிநிதி சம்பாஷணைகளில் முடிவு செய்யப்படும் எனத் தெரிகிறது.

பூட்டிக்கிடக்கும் தூதுவராலயம்

லண்டன், ஜூன் 4—

லூக்ஸ்போர்ட் வர்க்கல் அருகிலுள்ள சீன ஸ்தானிகாலயம், இன்னும் பூட்டிவைத்தபடியே இருக்கிறது. ஸ்தானிகர்கள் நியமிப்பது பற்றி பீகிங்கில் நடைபெற்ற சம்பாஷணையில் முட்டுக்கட்டை நீங்கியதாகத் தெரியவில்லை.

புது சீன சர்க்கார் அதிகாரிகளுக்கும் பிரிட்டிஷ் சர்க்கார் பிரதிநிதிக்குமிடையே இன்னும் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றனவாம்.

மதுரை மா. தி. மு. க. முதல் மாநாடு

கட்டண விவரம்:

நாடகங்களுக்குக் கட்டணமில்லை.

பெண்களுக்கு மாநாட்டுக் கட்டணம் இல்லை.

உணவுக் கட்டணம் உண்டு.

மாநாட்டுக்கட்டணம்:-

வரவேற்பாளர் (உணவுடன்)	ரூ. 5
பிரதிநிதி	ரூ. 2
பார்வையாளர்	ரூ. 1

சனி இரவு உணவும், ஞாயிறு காலைச் சிற்றுண்டியும் தனிச் சீட்டு ரூ. 1-0-0

ஞாயிறு பகல், இரவு இரு வேளை உணவுக்கும் தனிச் சீட்டு ரூ 1-0-0

வரவேற்புக் குழுவினர்

கட்டிட நிதிக்கு உங்கள் காணிக்கை எங்கே?

★ நாட்டு நடப்பு ★

அம்பேத்கார் பிறந்தநாள்

பெங்களூர், மே 28—

பெங்களூர் நகர தாழ்த்தப்பட்டோர் கழக சார்பில் 13—5—50 சனி மாலை 6மணிக்கு பூரத்தில் சோடிக்கப்பட்ட அம்பேத்கார் திருவுருவத்தை நகர முக்கிய வீதிகளில் எடுத்துச் செல்லப்பட்டு, 14-5-50 மாலை 6 மணிக்கு இராமகிருஷ்ண பாடசாலை மைதானத்தில் தோழர் லிங்கையா அவர்கள் தலைமையில் அண்ணலின் 58-வது ஆண்டு விழா தோழர் பி. எம். ராஜன் இன்னிசையோடு துவக்கப்பட்டு தோழர் பி. எம். சாமிநாதா நட்சத்திரக் கொடியேற்றியபின், சேலம் பண்டிதர் ஆர். பி. இராமச்சந்திரனுர் அம்பேத்கார் வாழ்க்கையை விளக்கியபின், தோழர் பி. பார்த்தசாரதி. வரதகிருஷ்ணப்பா, சி. குப்புசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், செயலாளர் பி. எம். சம்பந்தன் நன்றிகூற விழா முடிவுற்றது.

திருவள்ளுவர் இளைஞர் கழகம்

சந்தைப்புதுப்பாளையம், மே 26—

திருவள்ளுவர் இளைஞர் கழகம் 24-5-50 அன்று காலை திருவள்ளுவர் படிப்பகத்தின் துவக்கவிழாவை நடத்தியது. அவ்விழாவிற்கு தோழர் கு. சுப்ரமணி ரெட்டியார் அவர்களை தலைமைவகிக்குமாறு கழகத் தலைவர் தோழர் டி. ஏ. குப்புசாமி கேட்டுக்கொண்டார். தமிழ்த்தாய் வணக்கம் தோழர் ஜனார்த்தனம் என்பவரால் பாடப்பட்டது. காஞ்சி வித்வான் தோழர் நீலகண்ட முதலியார் அவர்கள் படிப்பகத்தின் கட்டடத்தைதிறந்து வைத்தார். தமிழ்க்கொடியேற்று விழாவை புதுப்பாளையம் ஊராண்மைக் கழகத் தலைவர் தோழர் பி. ஆர். முத்துகிருஷ்ணன் அவர்கள் நடத்தினர். படிப்பகங்களின் இன்றியமையாமை என்னும் பொருள் குறித்து வித்துவான் தோழர்கள் மன்னு, சுப்பிரமணியம், வெப்பிரமசிவாமி' முத்துசாமி, இராசரத்தின முதலியார் ஆகியோர் பேசினர்கள். திறப்பு விழாவை சிறப்புற நடத்திக்கொடுத்தமைக்கு தோழர் இராதாகிருஷ்ணன் அவர்கள் அனைவருக்கும் நன்றிகூறினர். தமிழ்த்தாய் வாழ்த்துடன் முடிவுற்றது.

பொதுக்கூட்டம்

காஞ்சிபுரம், மே 30—

24-5-50 அன்று மாலை 6-30 மணிக்கு இளைஞர் கழகச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் பி. ஆர். குப்புசாமி செட்டியார் அவர்கள் தலைமைவகித்தார். தமிழ்த்தாய் வணக்கம் வ. கண்ணன் என்பவர் பாடினர். "கல்வி" என்பது பற்றி காஞ்சி வித்துவான் தோழர் நீலகண்டம் அவர்களும், "கமது குறிக்கோள்" என்னும் பொருள் பற்றி காஞ்சி வித்துவான் தோழர் சுப்பிரமணியம் அவர்களும் பேசினர். தோழர் சிவசுப்பிரமணியசுவாமி கள் "படிப்பகங்களின் தேவை" என்னும் பொருள்பற்றிப் பேசினர். "ஆதாரக்கல்வி" என்னும் பொருள் பற்றியும் பேசினர். தலைவர் முடிவுரையில் படிப்பகத்திற்கும் இளைஞர் கழகத்திற்கும் உதவி செய்யவேண்டியது பெரியோர்கள் கடமை என்று பேசி முடித்தார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

திராவிட முன்னேற்றக் கழக துவக்க விழா

புஞ்சைத்தலையூர், மே 6—

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா 6-5-50 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு புஞ்சைத்தலையூரில் அரிக்காரன் வலசு எ. ஆர். சுப்பிரமணியம் பி.ஏ, அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் திருச்சி டி. கே. சீனிவாசன், சோபி ஜி. என். ராசு, ஈரோடு என். ஈ. பாலகுரு. எஸ். அப்பாவு, திருச்சி ஓராங்குசம். ஆகியோர் பேசுவர். பவிசெருச்சி உண்டு.

சீர்திருத்த திருமணம்

பொன்மலை, மே 25—

24-5-50 புதன்கிழமை காலை 9-30 மணிக்கு பொன்மலை சாலை சிடைம் 844 இல்லத்தில் வேலூர் சி. பி. சித்ரரசு அவர்கள் தலைமையில் தோழர் கா. துரைராசனுக்கும் தோழியர் சேதுராமிஅம்மையாருக்கும், சீர்திருத்த திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் சீர்திருத்தத்தின் அவசியத்தைப் பற்றி தோழர் டி. கே. சீனிவாசன், ஜி. எராங்குசம், கே. வரதன் சொற்பொழிவாற்றியபின், மணமக்களுக்குப் பொன்மலை திராவிட வாலிபர் கழகத்தின் சார்பாகவும், நண்பர்களின் சார்பாகவும் வாழ்த்திதழ், மலர்மாலை, பகுத்தறிவு புத்தகங்கள் ஆகியவைகள் வழங்கப்பட்டன.

புதுமைப் படிப்பகம்

செங்காசல்லூர், மே 29—

25 5 50 அன்று மாலை புதுமைப் படிப்பகக் கட்டிடத்தில் "திருவள்ளுவர் திருநாள்" தோழர் என். கருப்பண்ணன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் கருப்பண்ணன், அண்ணாசாமி, செயராமன், சிவஞானம் மாரியப்பன், சுவாமிநாதன் ஆகியவர்கள் திருவள்ளுவரைப்பற்றியும், நூலின் பெருமை குறித்தும், அது எங்ஙனம் திராவிட மக்களிடமிருந்து ஆரிய சூழ்ச்சிக்காரர்களால் மறைக்கப்பட்டது என்பதைப்பற்றியும், மக்களிடம் எந்த முறையில் குறளைப்பரப்பவேண்டும் என்பது குறித்தும் நீண்ட சொற்பொழிவாற்றினர். செயலாளர் நன்றிகூற விழா இரவு 8 மணிக்கு இனிது முடிந்தது.

"சிதைந்த வாழ்வு" – நாடகம்

பொத்தனூர், ஜூன் 2—

29-5-50 இவ்வூர் மாணவர் கழக ஆண்டு விழா, தோழர் வி மருதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. ஆர். கந்தசாமி, செ. அ. மணிவாசகம் ஆகியோர் பேசினர். இரவு 9-மணிக்கு தி. மு. கழகத்தைச் சேர்ந்த தோழர் கு. பெருமான் எழுதிய "சிதைந்த வாழ்வு" என்னும் நாடகம் மாணவர்களால் நடிக்கப்பெற்றது. நாடகத்திற்குத் தோழர் என். வி. சண்முகம் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர், நடிகர்களைப் பாராட்டிப் பேசுகையில், "மாணவர்கள் இதுபோன்ற சீர்திருத்த நாடகங்களை நடிக்க முன் வருவது வரவேற்கத்தகுந்தது. நாட்டின் கவலைதீர நல்ல ஏற்பாடு" என்று குறிப்பிட்டார்.

தி. ப திறப்பு விழா

நா. மழூர், ஜூன் 3—

1-6-50 மாலை வாணியம்பட்டணம் தோழர் கு. பழனியப்பா அவர்கள் தலைமையில், திருவள்ளுவர் படிப்பகத் திறப்புவிழா நடைபெற்றது. தோழர்கள் இரத்தினசாமி, க. திருமாறன் எஸ். கே. சாமி ஆகியோர், வள்ளுவர்காட்டிய வழி, வள்ளுவரும்—உலக அறிஞரும் வள்ளுவரும்—வடநூலாரும் என்பதுபற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். தலைவர் முடிவுரைக்குப்பின், தோழர் பழனிச்சாமி நன்றிகூற இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

கரியப்பாவுக்கு இந்திய மாணவர்கள் விருந்து

லண்டன், ஜூன் 4—

கேம்பிரிட்ஜிலுள்ள இந்திய மாணவர்கள் ஸ்தானத்தில் இந்திய சேனாதிபதி தோழர் கரியப்பா ஹைகமிஷனர் தோழர் கிருஷ்ண மேனனுடன் விஜயம் செய்தார். மாணவர்கள் நடத்திய விருந்துக்கு கேம்பிரிட்ஜ் மேயரும் வந்திருந்தார்.

தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மத்திய செயற்குழுக் கூட்டம், 10-6-50 சனிக்கிழமை இரவு 8-மணிக்குச் சோழவந்தான் "டனகால் இல்லத்"தில் கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும். பல முக்கியபொருள்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்என, தலைமை நிலைய பொறுப்பாளர் அறிவிக்கிறார்.

பஞ்சாலைகளுக்கு நிலக்கரி சப்ளை

மத்திய சர்க்காரின் புதிய உத்தரவு

பஞ்சாலைகளுக்கு நிலக்கரி ஒரு நியாயமான விகிதத்தில் வினியோகமாகும்படி செய்யும்பொருட்டு, இந்திய சர்க்கார் 1949-ம் வருடத்திய அத்யாவசிய சப்ளைகள் (தற்காலிக அதிகாரங்கள்) சட்டத்தின்கீழ் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். எல்லாப் பஞ்சாலைகளும், ஆலையின் மொத்த உற்பத்தி சக்தி, உற்பத்தியாகும் அளவு, இதற்கு முன்னுள்ள செலவாகிவந்த நிலக்கரியின் அளவு கையிருப்பிலுள்ள நிலக்கரி, பிறவகை எரிபொருள்களின் அளவுகள் அடுத்த பருவகாலத்தில் தேவையாயிருக்கக்கூடிய நிலக்கரியின் உத்தேச அளவு ஆகியவை பற்றிய விவரங்களை, பம்பாயிலுள்ள இந்திய மத்திய பருத்திக் கமிட்டிக்குத் தெரிவிக்க வேண்டுமென்று இந்த உத்தரவு கோருகிறது. இந்த விவரங்கள் 1950 ஜூலை 31-ந்தேதியோ அதற்கு முன்னுலோ இந்திய மத்திய கமிட்டிக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கப்படவேண்டும்.

தபால்-தந்தி இலாகா ஊழியர்தேர்ந்தெடுப்பு

இந்தியத் தபால்—தந்தி இலாகாவில் சில கீழ்த்தர உத்தியோகங்களுக்கு ஆட்களை நியமிப்பது சம்பந்தமாக சமீபத்தில், நடத்தப்படவிருக்கும் பரீட்சை விஷயமாய் விண்ணப்பதாரர்கள் தங்கள் மனுக்களுடன் அனுப்பவேண்டிய நற்சாட்சிப் பத்திரங்களை எந்த அந்தஸ்துள்ள நபர்களிடமிருந்து வாங்கவேண்டும் என்பது குறித்து சிலர் தகவல் கேட்டிருக்கிறார்கள். அத்தகைய அத்தாட்சிப் பத்திரங்களைக் கௌரவமான எந்த நபரிடமிருந்து வேண்டுமானாலும் வாங்கி அனுப்பலாம்; ஆனால் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கு அவைகளின் நகல்களை மட்டும் அனுப்பினால் போதும். இந்த நகல்கள் சரியானவை என்பதற்கு அத்தாட்சி கெஜெட் பதிவு உத்தியோகஸ்தரிடமிருந்து அல்லது மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து கையெழுத்து வாங்கி அனுப்பவேண்டும்.

இஸ்ரேலில் பணவீக்கம்

அம்மான், ஜூன் 4—

யூதநாணயம் 400% மதிப்பு குறையும் அளவுக்கு இஸ்ரேலில் பணவீக்கம் ஏற்பட்டுவிட்டதென்று இங்கு கிடைத்துள்ள டெல் அவீவ் செய்தி கூறுகிறது.

ஸ்டாக்ஹோம், ஜூன் 4—

இங்கு சில நாட்களாக தங்கியுள்ள மவுண்ட்பேட்டன் ஸ்வீடிஷ் கடற்படையிலுள்ள புதுகப்பல்களைப் பார்வையிட்டார்.

ஆசிரியருக்கு முடங்கல்

கோட்டைக்குள் குத்துவெட்டு

ஐயா,

28—5—50 தேதி மதுரை நகர் காங்கிரஸ் பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெற்றது. ஒன்றிரண்டு வார்டுகளைத் தவிர மற்ற எல்லா வார்டுகளிலும் போட்டி மிகப் பலமாக இருந்தது. ஒவ்வொரு வார்டிலும் முனிசிபல் தேர்தலுக்கு இருப்பதைப் போல சுவரொட்டி விளம்பரங்களும், துண்டுப் பிரசுரங்களும் கணக்கில்லாமல் காணப்பட்டன. காங்கிரஸ் அங்கத்தினர்களுக்குள் ளாகவே நடைபெறும் காங்கிரஸ் பஞ்சாயத்துத் தேர்தலில்காங்கிரஸ்காரர்களான அபேட்சகர்களே ஒருவர் தாக்கியும், ஒருவரிடம் உள்ள ஊழலை மற்றவர் எடுத்துக்காட்டியும், வெளியிட்ட துண்டு பிரசுரங்கள் காங்கிரஸில் இருக்கும் சகிக்க முடியாத நாற்றத்தைக் கிளப்பி விட்டுவிட்டது. இந்த அளவில் இருந்திருந்தாலும் கொஞ்சம் மரியாதையாக இருந்திருக்கும். தேர்தல் நடக்கும்போது காங்கிரஸ் ஊழியர்களுக்குள்ளேயே ஏற்பட்ட அடிதடி, குத்துவெட்டுச் சண்டைகள் போலீஸ் பந்தோபஸ்து இல்லாமல் தேர்தல் நடத்த முடியாமல் செய்துவிட்டது, இந்தத் தேர்தலில் சில வார்டுகளில்பல காங்கிரஸ்காரர்களுக்குள் தகராறு காரணமாக வெட்டுக் காயங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. மற்ற வார்டுகளில் போலீஸ் பந்தோபஸ்துடன் தேர்தல் நடைபெற்றது. மொத்தத்தில் காங்கிரஸ் நாற்றம் மதுரையில் சந்தி சிரிக்கிறது.

"பொதுமகன்"

மதுரை

* * *

வெடி விபத்து

ஐயா,

சமீபகாலங்களில் பயர் ஒர்க்ஸ் எனும் வெடி விபத்துக்கள் ஏற்பட்டு பல தொழிலாளர்கள் மாண்ட செய்திகள் தினம் பத்திரிகைகளில் வெளிவருகிறது. இத்தகைய பயர் ஒர்க்ஸ் விபத்துக்களில் 29—5—50 நடந்த சிவகாசி சௌத் இந்தியன் பயர் ஒர்க்ஸ் வெடி விபத்தானது, நாட்டில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த விபத்தில் மூன்றுபேர் மரணமடைந்தனர், ஒன்பது பேர் படுகாயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதுபோல் சென்ற வருடத்தில் சிவகாசி சண்முகா சாம்பியன் பயர் ஒர்க்ஸில் ஏற்பட்ட வெடி விபத்தில், 24 பேர்கள் மரணமடைந்தனர். இத்தகைய வெடி விபத்தானது சிவகாசி நகரில் மட்டும் வருடத்திற்கு இரண்டு தடவை ஏற்படுகிறது. இதனால், சுமார் முப்பது பேர்கள் வரை உயிர் இழந்துகொண்டுவருகின்றனர்.

இதுபோன்ற வெடிவிபத்துக்கள் நாட்டின் பல பாகங்களிலும் பயர் ஒர்க்ஸில் நடந்துவருகிறது. வெடிகளை உபயோகிப்பதால் திருவிழா காலங்களில் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு இந்நாட்டில் படுகாயங்கள் ஏற்படுகிறது.

பயர்ஒர்க்ஸில் உற்பத்தியாகும் வெடிகளால் நாட்டிற்கு எவ்வித மான பிரயோஜனமும் இல்லை. அதனுல் கோடிக்கணக்கான மக்களின் பணம் ஒரு சில பயர் ஒர்க்ஸ் முதலாளிகளிடம் போய் சேருகிறது, பயர் ஒர்க்ஸில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு எவ்விதமான பாதுகாப்பும் இல்லை மேலும் தொழிலாளர்களுக்கு வருஷத்திற்கு பாதி நாட்களுக்கு மட்டுமே [illegible] கிறது. குப்பாது [illegible] வேலை செய்ய [illegible] ல பயர் ஒர்க்ஸில் [illegible] தால் இருபது வருஷத்திற்கு மேல் வேலைசெய்ய முடிவதில்லை. இந்நிலைமையில் நாட்டின் பொருளாதாரத்திற்கும், மக்களுக்கும் எவ்விதமான பிரயோசனமும் இல்லாமல் இருக்கும் வெடி உற்பத்திசெய்யும் பயர் ஒர்க்ஸ்களுக்குக் கொடுத்திருக்கும் லைசென்ஸை அரசாங்கம் ரத்து செய்யவேண்டியது அவசியமாகும்.

வே. கருப்பையா

செயலாளர், இராமநாதபுரம்,

தீப்பெட்டித் தொழிலாளர் சங்கம்.

கஞ்சத்தில் அணுசக்தி உலோகம்

ஏராளமாக உள்ளதாம்

சாத்தூர், ஜூன் 2—

அணுசக்தி உண்டாகக் கூடிய "இல்மெனைட்" என்ற உலோகம் கஞ்சம் ஜில்லாவிலுள்ள குடலை என்னுமிடத்தில், ஏராளமாக இருக்கிறதென்று ரஹிமத்அலி என்பவர் கண்டுபிடித்துக் கூறி இருக்கிறார்.

20 சதுர மைல் பரப்புள்ள நிலப்பகுதியில், மிகவும் சுத்தமான உலோகம் கிடைக்கக் கூடிய பல இடங்கள் உள்ளனவென்று அவர் அறிவித்தார்.

சிங்கப்பூருக்குத் தபால்கள்

எஸ். எஸ். ரஜுலா என்ற கப்பல், 1950 ஜூன் 12-ந் தேதியன்று, சென்னையிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நகர சப் போஸ்ட் ஆபீசுகளில் ஜூன் 9-ந் தேதி வரையிலும், சென்னை ஜெனரல் போஸ்ட் ஆபீசில் ஜூன் 10-ந் தேதி மாலை 4.30 மணி வரையிலும் போடப்படும் தபால்கள் இந்தக் கப்பலில் அனுப்பப்படும்.

"கூலி"க்குப் பதில் "மஜ்தூர்"

இந்திய வேலையாட்களைக் குறிப்பிடுவதற்கு "கூலி" என்ற வார்த்தை உபயோகிக்கப்படுவதை ஆட்சேபித்து, இந்திய சர்க்காருக்கு அடிக்கடி விண்ணப்பங்கள் வந்து கொண்டிருந்தன. சர்க்கார் கடிதங்களில் இந்த வார்த்தையை இனிமேல் உபயோகிக்கக்கூடாதென்றும், இதற்குப் பதிலாக 'மஜ்தூர்' என்ற வார்த்தையையே உபயோகிக்கவேண்டுமென்றும் இந்திய சர்க்கார் தங்கள் காரியாலயங்கள் எல்லாவற்றிற்கும் உத்தரவிட்டிருக்கின்றனர், "மஜ்தூர்" என்ற வார்த்தை விரிவான பொருள் கொண்டதாயிருந்தபோதிலும் சில தொழில்களில் பிரபலமாக இருந்துவரும் கலாசி, லஸ்கர், செவகர் போன்ற வார்த்தைகள் தற்போதைக்கு வழக்கம்போல் உபயோகிக்கப்பட்டே வரும்.

தனி நபர்கள் நடத்தும் தொழில் ஸ்தாபனங்களுக்கு, இந்தக் கொள்கையை அனுசரித்து, இப்பொழுது "கூலிகள்" என்றழைக்கப்படும் வேலையாட்களைக் குறிப்பிட "மஜ்தூர்" என்ற வார்த்தை உபயோகிக்கப்படுவதை ஆதரிக்கும்படிகேட்டுக் கொள்ளப்படுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthu mari Chetty St, Madras-1.